සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**තෙවන වාර පරීක්ෂණය 2020** | **11 ශ්‍රේණිය**
மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 | தரம்11
**Third Term Test 2020** | **Grade 11**

ඉස්ලාම් I
இஸ்லாம் I
Islam I

පැය 01
1 மணித்தியாலம்
1 hour

**இஸ்லாம் - I**

**கவனிக்க :**
**I. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4)என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
**III. உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.**

01. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைபவை
(1) அல் - குர்ஆனும் இஜ்மாவும் (2) இஜ்மாவும் கியாஸும்
(3) அல் குர்ஆனும் சுன்னாவும் (4) சுன்னாவும் கியாஸும்

02. நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முதலாவது வஹி இறங்கிய இடம்
(1) ஸவ்ர் (2) மர்வா (3) ஸபா (4) ஹிறா

03. குல்லதைன் அளவைவிடக் குறைந்த மிகச்சுத்தமான நீரில் நஜீஸ் சேர்ந்து , நிறம் , மணம் , சுவை ஆகியவற்றுள் ஏதேனும் மாற்றம் ஏற்படாவிட்டால் அந்த நீர் எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) அல் மாஉல் முதனஜ்ஜிஸ் (2) அல் மாஉத்தஹூர்
(3) அல் மாஉத்தாஹிர் (4) அல் மாஉல் முஸ்த.்.மல்

04. தொழுகையில் முதலாவது அத்தஹிய்யாத் நிறைவேற்றுதல்
(1) பர்ழ் (2) ஸுன்னத் (3) ஜாஇஸ் (4) முபாஹ்

05. இறைவன் இல்லை என மறுப்பது **இல்ஹாத்** எனப்படுவது போல இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேருவதை
(1) ஷிர்க் எனப்படும் (2) குப்ர் எனப்படும் (3) நிபாக் எனப்படும் (4) ரித்தத் எனப்படும்

06. ஒரு மு.்.மின் நிறைவேற்ற வேண்டிய பணிகளுள் **“கிலாபத்”** குறிப்பது
(1) அல்லாஹ்வின் பிரதி நிதியாகத் தொழிற்படுவதனை (2) பூமியை வளப்படுத்துவதனை
(3) அல்லாஹ்வை வழிப்படுவதனை (4) இறை சட்டங்களை அமுல் நடத்துவதை

07. ஒட்டகங்களில் ஸகாத் விதியாவதற்கு ஒருவரிடம் இருக்க வேண்டிய ஒட்டகங்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 15 (3) 20 (4) 05

08. ஹஜ்ஜுக்கு இஹ்ராம் நிய்யத்து வைத்தவர் செய்ய அனுமதிக்கப்படாத ஒரு செயல்
(1) குளித்தல் (2) புறம் பேசுதல் (3) மணம் பூசுதல்
(4) சுன்னத்தான தொழுகையை நிறைவேற்றல்

09. ஸக்காத் கொடுக்க கடமை இல்லாதவன்
(1) விவசாயி (2) வியாபாரி (3) கடன்காரன் (4) நோயாளி

10. ரமழானில் இறுதிப் பத்தில் நிறைவேற்றும்படி ஸுன்னாவில் மிகவும் வலியுறுத்தப்பட்ட நற்செயல்
(1) உம்ரா (2) கியாமுல்லைல் (3) தராவிஹ் (4) இ∴திகாப்

11. முஜ்தஹித் பெற்றிருக்க வேண்டிய தகமைகளில் ஒன்று
(1) சகல மொழிகளையும் அறிந்திருத்தல் (2) குர்ஆனை ஓதத் தெரிந்திருத்தல்
(3) முஸ்லிமாக இருத்தல் (4) ஆரோக்கியமானவராக இருத்தல்

12. கீழே **X,Y** நிரல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களைக் கருதுக

| **நிரல் X** | **நிரல் Y** |
|---|---|
| (1) இமாம் மாலிக் (ரஹ்) | A – மத்ரஸதுர் ர∴யு |
| (2) இமாம் அஹ்மத் (ரஹ்) | B – அர்ரிஸாலா உஸூலிய்யா |
| (3) இமாம் ஷாபிஈ (ரஹ்) | C – மத்ரஸதுல் அஸர் |
| (4) இமாம் அபூஹனீபா (ரஹ்) | D – முஸ்னத் |

மேலே X நிரலின் கீழுள்ள சொற்களை Y நிரலின் கீழுள்ள சொற்களுக்கு ஏற்ப பொருத்தமாக ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடையைக் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

(1) ABDC (2) BCDA (3) DBAC (4) CDBA

13. இஸ்லாமிய சட்டக் கலையைக் குறிக்கும் அறபுச் சொற்தொடர்
(1) இல்முத் தப்ஸீர் (2) இல்முல் பிக்ஹு (3) இல்முல் மீராஸ் (4) இல்முல் அகீதா

14. இஸ்லாமிய சட்டத்துறையில் ஒப்புவமைக் காணல் எவ்வாறு அழைக்கப்படும் ?
(1) கியாஸ் (2) இஜ்மா (3) உர்பு (4) மஸ்லஹா

15. திருமணத்தின் போது **"வலி"** எனப்படுபவர்
(1) சாட்சி (2) மணமகனின் பொறுப்பாளன் (3) மணமகளின் பொறுப்பாளன் (4) நீதிபதி

16. பேணுதல் எனும் கருத்தைக் கொடுக்கும் பதம் எது?
(1) தக்வா (2) வரஉ (3) தஸ்கியா (4) ஸுஹ்த்

17. அறபுத் தீபகற்பத்தின் கிழக்கு எல்லை யாது ?
(1) பாரசீகக் குடா (2) செங்கடல் (3) அறபுக்கடல் (4) சிறியா பாலை வனம்

18. மனைவி கணவனிடமிருந்து விவாக விடுதலை கோருவது
(1) தலாக் (2) லிஹார் (3) பஸ்கு (4) குல்உ

19. **"அல் மு∴தீ"** என்ற அல்லாஹ்வின் திருநாமம் அவனின் எந்தப் பண்பினைக் குறித்துக் காட்டுகிறது
(1) செல்வந்தனாக ஆக்குபவன் (2) மிகவும் உதவுபவன்
(3) தாராளமாக கொடுப்பவன் (4) மிகவும் அன்பானவன்

20. தர்தீபுன் நுஸூல் என்பதன் மூலம் கருதப்படுவது யாது ?
(1) அல்-குர்ஆன் அருளப்பட்ட ஒழுங்கு (2) அல்-குர்ஆன் ஓதப்படுகின்ற ஒழுங்கு
(3) அல்-குர்ஆன் தொகுக்கப்பட்டுள்ள ஒழுங்கு (4) அல்-குர்ஆன் அருளப்பட்டமைக்கான காரணங்கள்

21. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களது சிறப்புப் பெயர்
(1) இமாமுல் அ∴ழம் (2) ஆலிமுல் குறைஷ் (3) இமாமுல் மதீனா (4) அஸதுல்லாஹ்

22. அபூபக்ர் (ரழி) அவர்கள் இஸ்லாமிய அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஹிஜ்ரி வருடம்
(1) 10 (2) 13 (3) 11 (4) 14

23. இலங்கையைத் தரிசித்து முஸ்லிம்கள் பற்றிய குறிப்புரைகளை பதிந்து வைத்த அரபு யாத்திரீகர்
(1) காலித் பின் பகாயா (2) இப்னு ஸஹ்ரயார் (3) இப்னு பதூதா (4) சித்தி லெப்பை

24. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைக் குறிப்பிடும் ஒரு நூல்
(1) கிதாபுல் உம்மு (2) புதூஹாதுல் புல்தான் (3) இஹ்யா உலூமுத்தீன் (4) அஜாஇபுல் ஹிந்த்

25. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலில் எழுதியவர்
(1) இபுனு கல்தூன் (2) இப்னு ஹிஷாம் (3) இப்னு இஸ்ஹாக் (4) இப்னு கஸீர்

26. **“உம்மதன் வஸதன்”** என்பதன் மூலம் நாடப்படுவது
(1) விட்டுக்கொடுத்து வாழல் (2) நடுநிலைப் பேணல் (3) சிறந்த சமூகம் (4) நடுநிலையான சமூகம்

27. அதிகமான மக்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் இரண்டு அருட் கொடைகள் என நபியவர்கள் கூறியது
(1) நீர்,உணவு (2) அறிவு,ஞானம் (3) ஆரோக்கியம்,ஓய்வு (4) தாய்,தந்தை

28. ஸ்பைனை வெற்றி கொண்ட மா வீரன்
(1) தாரிக் பின் ஸியாத் (2) முஹம்மத் பின் காஸிம் (3) முஹம்மத் இப்னு பாதிஹ் (4) ஸலாஹுத்தீன் ஐயூபி

29. போரை விட சமாதானத்தை முற்படுத்த வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனையாகும் . இது
(1) தஸ்கியா சார்ந்தவையாகும் (2) அவ்லவிய்யத் சார்ந்தவையாகும்
(3) வஸதிய்யத் சார்ந்தவையாகும் (4) ஸம்இய்யத் சார்ந்தவையாகும்

30. பின்வருவோரில் **“அஜ்னபி”** ஆனவர் யார் ?
(1) மனைவியின் தாய் (2) மகனின் மனைவி (3) சாச்சியன் மகள் (4) செவிலித் தாய்

31. தடை செய்யப்பட்ட வர்த்தக நடவடிக்கை
(1) அர்-ரிபா (2) அல்-இஜாரா (3) அஸ்-ஸலம் (4) அல்-முஷாரகா

32. நவீன சட்டப் பிரச்சினைகளைத் தீர்பதற்கு இஸ்லாம் வகுத்துள்ள வழிமுறை
(1) வாக்கெடுப்பு (2) சூரா (3) த.்.வா (4) இஜ்திஹாத்

33. **“முஜாகதுன் நப்ஸ்”** என்பதன் மூலம் கருதப்படுவது
(1) சுய விசாரனை (2) உளப்போராட்டம் (3) உளத் தூய்மை (4) உள அமைதி

34. இஸ்லாமிய வழங்கியுள்ள மனித உரிமைகளை விபரிப்பது
(1) முதலாம் அகபா உடன்படிக்கை (2) இரண்டாம் அகபா உடன்படிக்கை
(3) ஹுதைபிய்யா உடன்படிக்கை (4) மதீனா சாசனம்

35. ஒரு மார்க்கப் பிரச்சினையின் போதுபெரும்பான்மையான முஜ்தஹித்கள் ஒரு தீர்வில் ஒன்றுபடுவதைக் குறிக்கும் சொற்பிரயோகம்
(1) இஜ்மாஉல் ஸரீஹ் (2) இஜ்மாஉல் அக்ஸரிய்யா (3) இஜ்மாஉல் கவ்லி (4) இஜ்மாஉல் ஸுகூதி

36. நபியவர்களின் காலத்தில் கொலை செய்யப்பட்ட பொய் நபியின் பெயர்
(1) முஸைலமா (2) அஸ்வத் அன்ஸி (3) துலைஹா (4) ஸஜா

37. உமர் (ரழி) அவர்கள் **தீவானுல் பரீத்** என்ற தபால் திணைக்களத்தை உருவாக்கியது போல் உமையாக்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட திணைக்களம்
(1) காதிபுத் தீவான் (2) தீவானுல் பரீத் வல் அக்பர் (3) தீவானுல் கறாஜ் (4) தீவானுல் அஹ்தாத்

38. நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பெயர் அல்லாதது
(1) மாஹீ (2) ஹாஷிர் (3) காதிர் (4) ஆகிப்

39. **"ஒவ்வவொன்றினதும் இன்பம் அதற்குறிய இயல்பிலேயே தங்கியுள்ளது. கண்ணிண் இன்பம் அழகிய காட்சியைப் பார்ப்பதன் மூலம் கிடைக்கின்றது. காதின் இன்பம் அழகிய ஓசையைச் செவிமடுப்பதன் மூலம் கிடைக்கின்றது. உள்ளத்தின் இன்பம் அல்லாஹ்வை அறிவதன் மூலம் கிடைக்கின்றது**". எனும் மெய்ஞ்ஞானக் கருத்தைக் குறிப்பிட்டவர்.

(1) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்
(2) முஹியுத்தீன் அப்துல் காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்கள்
(3) புலைல் இப்னு இயால் (ரஹ்) அவர்கள்
(4) இமாம் குஷைரி (ரஹ்) அவர்கள்

40. பின்வரும் அட்டவணையில் **'அ'** நிரலுக்கேற்ப **'ஆ'** நிரலை சரியான ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க .

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 1. | இப்னு மாஜா | A. | முஹம்மத் இப்னு ஈஸா |
| 2. | அபூ தாவூத் | B. | கஸ்வின் |
| 3. | திர்மிதி | C. | 7275 |
| 4. | புஹாரி | D. | 201 |

(1) ABCD (2)CDAB (3) BACD (4) BDAC